


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஆகஸ்டு 24, 2017 | புரட்சி 16 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

### காவல்துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் கழகம் மனு

## விநாயகன் ஊர்வல சட்ட மீறல்களை தடுத்து நிறுத்துக!

மதவாத சக்திகள் விநாயகன் சிலை ஊர்வலம் என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தும் ஊர்வலங்கள் நாட்டில் பதட்டத்தையும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும் உருவாக்கி வருகின்றன. மத அரசியலை மதங்களுக்கான பண்டிகைபோல மாற்றிக் காட்டி ஊர்வலம் நடத்துவதும்; அடிப்படை மத உரிமை என்றும் இந்து முன்னணியைச் சார்ந்த இராம கோபாலனும் மதவாத அமைப்புகளும் கூறி வருகின்றன. சட்டத்துக்குப் புறம்பாக நடத்தப்படும் இந்த ஊர்வலங்களில் நடக்கும் விதி மீறல்களைத் தடுக்கக் கோரி டிராபிக் ராமசாமி என்ற பார்ப்பனரே உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.



பதட்டம் நிறைந்த பகுதிகளில் விநாயகன் சிலைகள் வைக்கப்பட்டு வருகின்றன. காவல்துறை இதற்கான இடங்களைத் தேர்வு செய்து அந்த இடங்களில் மட்டுமே சிலைகளை வைக்க வேண்டும் என்று வரையறுத்தாலும் அவைகள் மீறப்படுகின்றன. காவல்துறை அனுமதித்த சிலைகளைவிட கூடுதலாக சிலைகள் வைக்கப்படுகின்றன. கடல் நீரை, நீர் நிலைகளை மாசுபடுத்தும் இரசாயனங்களைப் பயன்படுத்தி சிலைகளை செய்யக் கூடாது என்று பசுமைத் தீர்ப்பாயம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விடுத்துள்ள அறிவுறுத்தலைப் பொருட்படுத்துவதில்லை.

மின்சாரம் கொக்கிப் போட்டு எடுக்கப்படுகிறது. சிலைகளை அமைக்கும் இடங்களில் மின்சார வாரியத்திடம் தடையில்லாச் சான்றிதழ் பெறவேண்டும் என்ற விதிகளையும் பின்பற்றுவதில்லை. உயர்நீதி மன்றம் இது குறித்து காவல்துறையிடமும் மின்வாரியத்திடமும் விளக்கம் கேட்டு தாக்கீது அனுப்பியுள்ளது.

சென்னையில் இஸ்லாமியர்களின் ‘பக்ரீத்’ பண்டிகை நாளான செப்டம்பர் 3ஆம் தேதி விநாயகர் ஊர்வலத்தை அறிவித்திருப்பது மேலும் பதட்டத்தை உருவாக்கியுள்ளது. அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோயில்களின் சார்பிலும் விநாயகர் சிலைகள் வைக்கப்படுகின்றன. இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி என்று பல்வேறு பெயர்களில் செயல்படும் இந்து அரசியல் அமைப்புகள் தங்களுக்குள் போட்டிப் போட்டுக் கொண்டு சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. சிலைகளின் கைகளில் தங்களின் அமைப்பு கொடிகளை கட்டி விடுகிறார்கள்.

இந்த சட்ட மீறல்களை சுட்டிக் காட்டி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாநகர காவல்துறை அலுவலகம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், இந்து அறநிலையத் துறை அதிகாரிகளிடம் கோரிக்கை மனுக்கள் நேரில் அளிக்கப்பட்டன.

சென்னை மாவட்டக் கழக தோழர்கள் ஆகஸ்டு 18ஆம் தேதி மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நேரில் சென்று கோரிக்கை மனுவை வழங்கினர். இதேபோல் ஈரோடு, நாமக்கல், திருப்பூர், சேலம், தூத்துக்குடி, நாகை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களும் கோரிக்கை மனுக்களை காவல் துறையிடம் வழங்கியுள்ளனர்.

## விநாயகர் சிலை ஊர்வலங்களில் பங்கேற்பது – அம்பேத்கர் கொள்கைக்கு இழைக்கும் துரோகம்!

*14.10.1956* அன்று நாக்பூரில் புத்தமார்க்கம் தழுவிய அம்பேத்கர், மதமாற்றத்துக்குத் திரண்டிருந்த இலட்சக் கணக்கான மக்களிடம் 22 உறுதி மொழிகளைக் கூறி ஏற்கச் செய்தார். விநாயகன், இலட்சுமி, இராமன், கிருஷ்ணன் மற்றும் இந்துக் கடவுள்களை வணங்க மாட்டேன் என்பதே அந்த உறுதி! புரட்சியாளர் அம்பேத்கர் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட எந்த அம்பேத்கரிஸ்டும் ஒருபோதும் விநாயகர் சிலை ஊர்வலத்தில் பங்கேற்க மாட்டார்கள்; பங்கேற்கவும் கூடாது. விநாயகர் சிலை ஊர்வலத்தில் பங்கேற்பது அம்பேத்கர் உழைத்த இலட்சியத்துக்கு செய்யும் துரோகம்.



அம்பேத்கர் - நாக்பூரில் எடுத்த உறுதிமொழிகளை இங்கு வெளியிடுகிறோம்:

- பிரம்மா, விஷ்ணு, சிவன் மூன்றையும் கடவுளாகக் கருதி நான் வணங்க மாட்டேன்.
- இராமன், கிருஷ்ணன் இரண்டும் அவதாரமென எண்ணி நான் வணங்க மாட்டேன்.
- **விநாயகன், லட்சுமி மற்றும் இந்து தேவதைகளை தெய்வங்களாக ஏற்று நான் வணங்க மாட்டேன்.**
- கடவுள் பிறந்ததாகவோ, அவதாரம் எடுத்து வந்ததாகவோ நான் நம்ப மாட்டேன்.
- மகாவிஷ்ணுவின் அவதாரம்தான் புத்தர் என்ற விஷமத்தனமான பிரச்சாரத்தை எதிர்த்து நான் முறியடிப்பேன்.
- பிறப்பு, இறப்பு நிகழ்ச்சிகளில் இந்து மதச் சடங்குகளை நான் செய்ய மாட்டேன்.
- மகாபுத்தரின் போதனைகளையும், நெறிகளையும் மீறி நான் நடக்க மாட்டேன்.
- பார்ப்பனர்கள் செய்யும் எந்த ஒரு ஆச்சாரச் செயலையும் நான் அனுமதிக்க மாட்டேன்.
- மானுட சமத்துவத்தில் நான் மிகுந்த நம்பிக்கை வைப்பேன்.
- சமத்துவத்தை நிலைநிறுத்த நான் முழு மூச்சாய் பாடுபடுவேன்.
- மகாபுத்தரின் எட்டு வழி நெறிகளை நம்பிக்கையோடு நான் பின்பற்றுவேன்.
- மகாபுத்தரின் புத்த மார்க்க போதனைகளை ஏற்று நான் செயல்படுவேன்.
- எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டி அவைகளை பாதுகாத்து நான் வாழ வைப்பேன்.
- நான் பொய் பேச மாட்டேன்.
- நான் களவு செய்ய மாட்டேன்.
- நான் காமவெறி கொள்ள மாட்டேன்.
- நான் மது அருந்த மாட்டேன்.
- புத்தர் போதித்த அன்பு, அறிவு, பரிவு ஆகிய உயரிய நெறிகளின் அடிப்படையில் என் வாழ்க்கையை நான் உருவாக்க முயற்சி செய்வேன்.
- மானுட நேயத்திற்கு முரணானதும், சமத்துவம் இல்லாததுமான இந்து மதத்தை விட்டொழித்து இன்று முதல் மேன்மைமிகு பவுத்தத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.
- புத்தரும் அவர் கொள்கையும் உண்மையான மார்க்கமென நான் உறுதியாக ஏற்கிறேன்.
- இன்று பௌத்தனானதால் மறுவாழ்வு பெற்றதாய் நான் மனதார நம்புகிறேன்.
- புத்தரின் கொள்கைக் கோட்பாட்டிற்கேற்ப புத்த நெறிகளுக்கிணங்க இன்று முதல் செயல்படுவேன்.

இதுதான் அம்பேத்கர் பல இலட்சம் மக்களோடு எடுத்த உறுதி மொழி.

விநாயகன் சிலை ஊர்வலங்களும் அதில் பங்கேற்பதும், புரட்சியாளர் அம்பேத்கர் கொள்கைக்கு எதிரானது என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்!

## விநாயகர் சிலை ஊர்வலம் மத ஊர்வலம் அல்ல!

- ‘விநாயகர் சதுர்த்தி’ என்பது இந்துக்களின் பண்டிகை. பஞ்சாங்கத்தின்படி அது ஆக.25இில் நம்பிக்கையுள்ளவர்களால் வீடுகளில் கொண்டாடப்படுகிறது. அது மதத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கான மத உரிமை. அறிவியல் பார்வையில் சிந்திப்போர் இந்த பண்டிகைகளை கொண்டாடுவது இல்லை. இது பகுத்தறிவாளர்களுக்கான உரிமை.
- பிரச்சினை எங்கே துவங்குகிறது? வீட்டுக்குள் பக்தர்கள் கொண்டாடும் பண்டிகையை வீதிகளுக்குக் கொண்டு வந்து மதத்தை அரசியலாக்கி அதன் மூலம் ஏனைய மதத்தினரை மத நம்பிக்கை இல்லாதோரை எதிரிகளாக சித்தரித்து கலவரத்தையும் பதட்டங்களையும் உருவாக்கும்போதுதான், ‘மதம்’ அரசியலாக்கப்படுகிறது.
- ‘இந்துக்களே ஒன்றுபடுங்கள்’ என்று முழங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட இந்து அரசியல் அமைப்புகள் தங்களுக்குள் ‘ஒற்றுமையை’ உருவாக்க முடியாமல் சிலைகளை அமைப்பதில் போட்டிப் போட்டுக் கொண்டு வெவ்வேறு அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு பொது மக்களுக்கு இடையூறுகளையும் சமூகப் பதட்டத்தையும் உருவாக்கி விடுகிறார்கள். இப்போது சிலைகளை அமைக்கும் ‘இந்து அரசியல்’ அமைப்புகள் எவை? பா.ஜ.க.வின் ஊது குழல்கள்.
- இவர்கள்தான் நமது ஒடுக்கப்பட்ட மக்களின் மருத்துவ கல்வி உரிமையைப் பறிக்கும் நீட் தேர்வை நியாயப்படுத்துகிறவர்கள்.
- இவர்கள்தான், எரிவாயு மான்யத்தைப் பறித்தவர்களுக்கு முட்டு கொடுப்பவர்கள்.
- இவர்கள்தான், போராடும் நமது விவசாயிகளை அவமதிக்கும் மோடி ஆட்சிக்கு ‘ஜே’ போடுகிறவர்கள்.
- இவர்கள்தான், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுக்கும் மோடி ஆட்சிக்கு வாழ்த்துப்பாடுகிறவர்கள்.
- இவர்கள்தான், மீதேன், ஹைடிரோ கார்பன், பெட்ரோலிய பொருள்களைத் தோண்டி நமது மண் வளத்தை மலடாக்குகிற திட்டங்களைத் திணிப்பதை எதிர்க்கும் நமது மக்களை தேசத் துரோகிகள் என்பவர்கள்.
- இவர்கள்தான் ஜி.எஸ்.டி. வரியைத் திணித்து நமது சிறு தொழில்களை முடக்கு வதற்கு பச்சைக்கொடி காட்டுகிறவர்கள்.
- அடுக்கடுக்காக நமது மக்கள் வாழ்க்கையில் சுமைகளை ஏற்றி வாழ்வியலை முடக்கிடும் பா.ஜ.க. ஆட்சியின் செல்லப் பிள்ளைகள் இவர்கள்தான்.; மோடி ஆட்சிக்கு எதிராக வாய் பேச மறுப்பவர்கள்.

இவர்கள்தான் விநாயகர் அரசியலுக்கு நமது மக்களை அழைக்கிறார்கள்.

இப்போது நடக்கும் விநாயகச் சிலை ஊர்வலங்களுக்குப் பின்னால் நிற்கும் – மக்கள் விரோத அரசியலை தமிழர்களாய், நாம் புரிந்து கொள்வோம்.

நம்பிக்கையாளர்களே! விநாயகர் சதுர்த்தியை வீட்டுக்குள் நடத்தும் பண்டிகை யாகக் கொண்டாடுவது உங்கள் உரிமை!

ஆனால், மக்கள் விரோத மதவாத அரசிய லோடு வீதிக்கு வரும் விநாயகர் சிலை ஊர்வலங் களுக்கு ஆதரவு தருவது நமது வாழ்வுரிமையைப் பறிக்கும் அரசியலுக்கு காட்டும் ஆதரவு!

விநாயகன் சிலை அரசியலை புறக்கணிப் போம்;

வாழ்வுரிமைக்கான போராட்டத்துக்கு குரல் கொடுப்போம்;

வாருங்கள், தமிழர்களே!

# மருத்துவ முதுகலைப் படிப்புக்கான நீட் தேர்வில் ஊழல்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதுகலை பட்டப்படிப்புக்காக நடந்த நீட் தேர்வுகளில் மோசடி நடந்துள்ளதாக தில்லி போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

நீட் தேர்வு நடத்தும் பொறுப்பை அமெரிக்காவைச் சேர்ந்த ப்ரோமெட்ரிக் நிறுவனத்திடம் எந்தவொரு டெண்டரும் கோராமல் வழங்கியுள்ளது தேசிய தேர்வாணையம் (National Board of Examinations). ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட புரோமெட்ரிக் நிறுவனம், அதை சி.எம்.எஸ் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

சி.எம்.எஸ் நிறுவனம் (மருத்துவ மற்றும் மருத்துவ சேவைக்கான மய்யம்) காண்டிராக்ட் அடிப்படையில் பல்வேறு உள்ளூர் நிறுவனங் களிடமிருந்து ஊழியர்களை நியமனம் செய்துள்ளது.

இந்நிலையில் நடைபெற்ற தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புரோமெட்ரிக் முறையில் எழுதப்படும் தேர்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் கணினி களுக்கு இணைய இணைப்பு இருக்கக் கூடாது என்பது விதி. இந்த விதி பல்வேறு தேர்வு மையங்களில் மீறப்பட்டுள்ளது.

கணினிகளில் ஆம்மி அட்மின் (Ammy admin) எனும் இரகசிய மென்பொருளை நிறுவி, அவற்றின் திரைகளை (Desktop Screen) வெளியிடங்களில் இருந்து இயக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு ஹேக் செய்யப்பட்ட கணினியில் தேர்வெழுத இலஞ்சம் பெற்றுள்ளனர்.

இக்கணினிகளில் தேர்வெழுத வரும் மாணவர்கள், வெறுமனே கணினிகளின் முன் அமர்ந்திருக்க வேறு ஒரு இடத்தில் இருந்து அக்கணினிகளின் திரையை இயக்கி (Remote Access) ஏஜெண்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வேறு நபர்கள் தேர்வை எழுதியுள்ளனர்.

நீட் தேர்வுகளுக்காக பயன்படுத்தப்பட்ட கணினிகளில் இரகசிய மென்பொருட்களை நிறுவி மோசடியில் ஈடுபட்டவர்கள், தேர்வு முடிந்த உடனேயே அவற்றில் உள்ள ஆதாரங்களை முற்றிலுமாக அழித்துள்ளனர்.

சில மையங்களில் நேரடியாகவே இணைய இணைப்பு கொண்ட கணினியில் தேர்வை எழுத அனுமதிப்பதற்கு இலஞ்சம் பெற்றுள்ளனர்.

இலஞ்சம் கட்டிய மேட்டுக்குடி குலக் கொழுந்துகள், நீட் தேர்வில் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை இணையத்தில் தேடி எழுதியுள்ளனர். ஒரு சில மையங்களில் தேர்வு மைய நிர்வாகிகளே, கேள்விகளுக்கான விடைகளை துண்டுத் தாள்களில் எழுதி மாணவர்களிடம் கொடுத்துள்ளனர்.

நீட் தேர்வுகள் அறிமுகம் செய்யப்பட வுள்ளதாக அறிவிக்கபட்டபோதே, இது இன்னுமொரு “வியாபம்” ஊழலுக்கு வழிவகுக்கும் என்று பல்வேறு தரப்பில் இருந்து சுட்டிக் காட்டப்பட்டது இப்போது நிரூபிக்கப் பட்டுள்ளது.

இந்த இலட்சணத்தில், தமிழக மாணவர்கள் நீட் தேர்வுகளில் தோல்வியடைந்ததற்கு தமிழகத்தின் கல்வித் தரம் பின் தங்கியுள்ளதே காரணம் என தமிழிசையும், ஆர்.எஸ்.எஸ். பொன்னாரும் கதை அளக்கிறார்கள்.

# ஜெயராணி – திவ்ய பாரதிக்கு ‘பெரியார் சாக்ரடீஸ்’ விருது



திராவிடர் கழகத்தில் துடிப்புடன் பணியாற்றியவரும் அந்தக் கழகம் நடத்தும் ‘உண்மை’, ‘பெரியார் பிஞ்சு’ இதழ்களின் பொறுப்பாசிரியராகவும் செயல்பட்ட பெரியார் குடும்பத்தைச் சார்ந்த ‘பெரியார் சாக்ரடீஸ்’ விபத்தில் இளம் வயதில் மரணமடைந்தார். அவரது பெயரால் நினைவு விருதுகளை அவரது நெருக்கமான தோழர்கள் அஜயன் பாலா, நாச்சிமுத்து மற்றும் தோழர்கள் வழங்கி வருகின்றனர்.

இவ்வாண்டுக்கான விருது வழங்கும் விழா ஆகஸ்டு 6ஆம் தேதி மாலை சென்னை கவிக்கோ அரங்கில் நடந்தது. ‘மஞ்சள்’ நாடகத்துக்கு சிறப்பாக உரையாடல் எழுதியவரும், ‘ஜாதியற்றவளின் குரல்’ நூலாசிரியருமான ஜெயராணி, ‘கக்கூஸ்’ ஆவணப்பட இயக்குநர் திவ்ய பாரதி ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டன.


ஜாதி வெறியர்களின் அச்சுறுத்தல் கொலை மிரட்டல் காரணமாக தலை மறைவாக இருக்கும் சூழலுக்கு தள்ளப்பட் டிருந்த திவ்ய பாரதி நிகழ்வில் பங்கேற்க இயலவில்லை. இந்த இரு இளம் தோழியர்களின் ஜாதி ஒழிப்பு செயல்பாடு களையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டது.

விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில துணைப் பொதுச் செயலாளர் மகேந்திரன், இயக்குநர் பாலாஜி சக்திவேல், அய்.நா.வில் பணியாற்றி வருபவரும், ‘அண்ணா’ வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவருமான திராவிடர் இயக்கத்தைச் சார்ந்த கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்று உரை யாற்றினர்.

விழாவில் பெரியார் சாக்ரடீஸ் குடும்பத்தினரும் கலை, இலக்கியத் தோழர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

# விநாயகன் கதை அன்றும், இன்றும்!



*விநாயகன் பிறப்புப் பற்றி பெரியார் எழுதிய கட்டுரை.*

சதுர்த்தி விநாயகர் எனும் கடவுள் இந்த நாட்டிலே உற்பத்தியான கடவுள் என்றும் சொல்ல முடியாது. வடநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கே இவ்வளவு கூத்தடிக்கப்படுகிறது. ஆற்றங்கரையோரம், அரசமரத்தின் கீழ், குளத்தங்கரையிலும், வீதிகளின் சந்தியிலும் வைக்கப்பட்டு இருக்கும் இந்தக் கடவுளின் யோக்கியதையைச் சொல்லப் போனால் அது ஏனைய 'கடவுள்'களுக்கு மிகவும் வெட்கக் கேடாகும். அதாவது, இவருடைய பிறப்பின் வரலாறு அந்தப் பார்ப்பனர்களாலேயே எழுதப்பட்ட புராணங்களில் இருந்து பார்த்தாலும் கூட மிக மிக மோசமாக உள்ளது.

விநாயகர் பிறப்புப் பற்றி மூன்று வரலாறு உள்ளது. நம் மக்களுக்கு இவற்றில் இருந்து 'இது உண்மையில் கடவுள்' என்று சொல்ல முடியுமா என்பதை அறிய முடியவில்லை. சிவன் என்ற கடவுளின் மனைவி பார்வதி குளிக்கப் போனாளாம். தான் குளிக்கின்றபோது யாராவது அந்த அறைக்குள் புகுந்துவிடக்கூடாதே என்று பயந்து குளிக்கும் அறைக்கு வெளியே காவல் வைப்பதற்கு ஒரு உருவத்தை உற்பத்தி செய்தாளாம். அந்த உருவத்தை எப்படி உற்பத்தி செய்தாள் என்பது தான் கடவுள் தன்மையை விளக்கும் அதிசயம். முதலாவதாக, பெண்கள் குளிக்கும்போது அங்கு அந்த அறைக்கு ஆண்கள் போவது சர்வசாதாரணமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், யாராவது வந்து விடுவார்களோ என்ற பயம் இருந்திருக்கத் தேவையில்லை; காவல் செய்யவும் ஆள் தேவையில்லை. அடுத்தபடியாக, ஆண்கள் யாராவது வந்து விடுவார்கள் என்ற பயம் இருந்தால் விநாயகர் என்று செய்யப்பட்ட அந்த உருவம் ஆண் உருவம் தானே! ஆண்கள் வந்துவிடக் கூடாதென்ற நினைப்பினால் ஒரு ஆணையே உற்பத்தி செய்து சதா நேரமும் பார்த்துக்கொண்டு இருக்கச் செய்வது எவ்வளவு புத்திசாலித்தனம்?

குளிப்பதற்காகச் சென்ற பார்வதி தன் உடம்பின் மேல் உள்ள அழுக்கை உருட்டி ஒரு உருண்டை பிடித்து, அதை வாசற்படியில் வைத்து உயிர் கொடுத்தாள் என்று கூறப்படுகிறது. இதுதான் விநாயகர்!

ஒரு மனிதனுடைய எடைக்கு ஏற்றவாறு அத்தனை பெரிய அழுக்கு பார்வதியின் மேல் இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா? எனவே, சுத்த ஆபாசமும் அசுத்தமும் நிறைந்தவளாகவே நாம் அவளைக் கருதவேண்டியுள்ளது. அடுத்தப்படியாக, அவள் குளிக்கும்போது அங்கே வருகின்றான் சிவன். சிவனைக் கண்டதும் உமா கேட்கின்றாள், "இங்கே எப்படி வந்தீர்? நான் குளிக்கும் போது நீர் வரலாமா? ஒரு ஆளை நடையில் காவல் வைத்து இருந்தேனே, அவனை எப்படி தட்டிக் கழித்துக் கொண்டு வந்தீர்கள்?" என்றதும், அதற்குப் பரமசிவன் கூறுகின்றார், "நான் வரும்போது நடையிலே ஒருவன் நின்று கொண்டு வழி மறித்தான்; நான் இங்கே வரவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவன் விடமாட்டேன் என்றான்; யாராய் இருந்தாலும் சரி, கணவனாய் இருந்தாலும் விட மாட்டேன் என்றான்! என்னைவிடாமல் தடுத்தான். எனவே நான் என் கை வாளால் அவன் தலையைச் சீவினேன். பிறகு தடையின்றி உன்னைக் காண வந்தேன்" என்றான். இதிலே குளிக்கும் பெண் தன் மனைவியாய் இருந்தாலும்கூட அவனுக்கு அங்கே என்ன வேலை?

இரண்டாவது அதற்காக ஒரு மனிதனையே கொலை செய்துவிட்டுப் போகவேண்டிய அவ்வளவு பெரிய சங்கதி அங்கே என்ன நடந்துவிட்டது? மூன்றாவது அவள் கணவனே என்று தெரிந்த பின்னும் பரமனை அவன் தடுத்தது எவ்வளவு முட்டாள்தனம்? இவற்றை எல்லாம் யோசனை செய்தால் இது ஒரு அண்டப் புளுகு என்பதும், முட்டாள்தனமான நடவடிக்கை என்பதும் விளங்கும். இதனை அறிந்த பார்வதி, துடிதுடித்துக் கொண்டு ஓடி வந்து பார்க்கின்றாள். தலைதுண்டாக்கப்பட்டு உள்ளது. ஆனால் துண்டாக்கப்பட்ட தலையை அங்கே காணோம். உடனே பரமனை நோக்கி "நாதா என் அருமைச் செல்வம் - என் குழந்தை போன்று நான் உற்பத்தி செய்த அந்த அருள் செல்வத்தை எனக்குத் தாங்கள் தந்தாக வேண்டும். இல்லையேல் என்னால் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது!" என்று கூறினாள். பிறகு இதைக் கேட்ட பரமன் என்ன செய்வதென்று யோசித்து, கடைசியாக ஒரு யானையின் தலையைக் கொய்து அந்த முண்டத்தின் மேல் வைக்கின்றான். உடனே அந்த முண்டம் யானைத் தலை கொண்ட விநாயகர் ஆகிறது. இது ஒரு கதை.

மற்றொன்று பரமனும், பார்வதியும் ஒரு நாள் வனத்திற்குச் சென்ற போது, ஒரு ஆண் யானையும், பெண் யானையும் கலவி செய்து கொண்டு இருந்ததைப் பார்வையிட்டனர். அதை பார்த்த ஆசையில் பரமனும் பார்வதியும் யானை வடிவில் உருமாறிக் கலவி செய்து பெற்றது தான் விநாயகர்.

மூன்றாவது, ஒரு நாள் பார்வதியும் பரமனும் போய்க்கொண்டு இருக்கையில், ஒரு யானையின் உருவம் (பொம்மை) ஒன்றைக் கண்டார்களாம். ஆகவே, அதன் மேல் மோகம் கொண்ட பார்வதியும் அதுபோல் பிள்ளை பிறக்கவேண்டும் என்ற நினைத்தாளாம் . ஆகவே, அப்படிப் பிறந்தது தான் விநாயகர் என்றும் கூறுகிறார்கள். ஆகவே இந்த மூன்று கதைகளையும் தெரிந்த மக்களே இந்தப்படி மண்டையை உடைப்பார்கள் என்றால் , இவர்களின் புத்திகெட்டத் தன்மையை, முட்டாள்தனத்தைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியுமா? இந்தப்படி ஆபாசமான கதையை எழுதி நம்மை நம்பும்படிச் செய்துவிட்டனர் பார்ப்பனர். ஆகவே, இது சிவனும் சுப்பிரமணியனும் வந்த காலத்திலே வந்தது, வட நாட்டான் இங்கு கொண்டுவந்து விளம்பரம் செய்துவிட்டான். அது இப்போது பெரிய கடவுளாக மதிக்கப்பட்டு எல்லாக் காரியங்களுக்கும் முன்னே வைக்கும் இடத்தைப் பெற்றுவிட்டது. ஆனதால் தான் பிள்ளையார் சதுர்த்தி-விநாயகர் சதுர்த்தி என்று ஆடம்பரமான நாளைக் கொண்டாடுகிறார்கள். எனவே, இதை எல்லாம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தால், பகுத்தறிவைப் பயன்படுத்திப் புகுந்து பார்த்தால் மனிதனுக்கு இதன் உண்மை புலனாகும். ஆனால் நாம் அப்படிச் செய்வது இல்லை. இதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம்.

**– பெரியார்**

### இதே போன்ற ஒரு கதை இப்போது நடக்குமா?

- கதவுகள் இல்லாத குளியல் அறைக்கு குளிக்கப் போகிறாள் பார்வதி. புராண காலத்திலேயே குளியலறை இருந்திருக்கிறது. ஆனால் கதவு மட்டும் இல்லை. 'சோப்பு' தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தக் கதை தெரிந்தால் 'இதுதான் பார்வதி குளித்த' சோப் என்று தொலைக்காட்சி விளம்பரம் வந்திருக்கும். இனி அப்படி ஒரு விளம்பரம் வந்தாலும் வியப்பதற்கு இல்லை.

- குளியலறைக்குள் எவரும் நுழைந்துவிடக் கூடாது என்பதற்கு 'வாட்ச்மேன்' ஒருவனை பார்வதி தயார் செய்திருக்கிறார். அந்த 'வாட்ச்மேன்'தான் 'விநாயகன்'. பார்வதி எனும் பெண் குளிக்கும் இடத்துக்குள் ஒரு ஆண் நுழைந்து விடாமல் தடுக்க 'வாட்ச் வுமன்' (Watch woman) ஒருவரை தயார் செய்யாமல், ஏன் 'வாட்ச்மேன்' என்ற ஆண் நபரை தயார் செய்தார் என்று பெரியார் கேட்கிறார். அற்புதமான கேள்வி!

  நட்சத்திர ஓட்டல் குளியலறைக்குள்ளும் சில 'பெண்கள் விடுதி குளியலறைகளிலும் 'சி.சி. டி.வி.' கேமிராக்கள் திருட்டுத்தனமாக பொருத்தப்படுகிறது என்ற செய்திகள் அவ்வப்போது வருகின்றன. பரமசிவன் என்று ஒரு கடவுள் இப்போது இருந்திருந்தால் 'இரகசிய சி.சி.டி.வி காமிரா'வுக்கு ஏற்பாடு செய்திருப்பான். விநாயகன் கதைக்கே வேலை இல்லாமல் போயிருக்கும். விநாயகன் சிலை ஊர்வலமும் இருந்திருக்காது.

- பார்வதி உற்பத்தி செய்த 'விநாயகனின்' மூலப் பொருள் அழுக்கு. அழுக்கு கடவுள் உற்பத்திக்கான கச்சாப் பொருளாக பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இப்படி ஒரு தொழில்நுட்பம் நமது புராண காலத்திலேயே இருந்தது என்ற தகவலை, நமது 'பாரதப் பிரதமர்' மோடியின் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறோம். அடுத்து அவர் பங்கேற்கவிருக்கும் விஞ்ஞானிகள் மாநாட்டில் இந்த புராண காலத்து அறிவியல் பெருமையை மார்தட்டிக் கூறுவார் அல்லவா?

- பார்வதியால் இவ்வளவு தடைகள் போடப்பட்டிருந்தாலும்கூட பரமசிவன் 'என்டிரி'யை தடுக்க முடியவில்லை. குளியலறைக்குள் தன்னை உள்ளே போகக் கூடாது என்று மிரட்டிய 'விநாயகனை', 'என்கவுன்டரில்' போட்டுத் தள்ளிவிட்டு பரமசிவன் குளியலறைக்குள் நுழைந்து விட்டான். அங்கே தான் சிவன் நிற்கிறான் போங்க!

- 'என் கவுன்டரில்' தலையை இழந்து நின்ற விநாயகனைப் பார்த்து பார்வதி பதறிப் போனாள். 'நான் உருவாக்கிய விநாயகனின் தலை போய்விட்டதே' என்று அழுது புரண்டாள். மனித உரிமை ஆணையம் அன்று இல்லை. இருந்திருந்தால் புகார் தந்திருப்பாள்!




விநாயகன் 'கொடுத்து வைத்தவன்' அப்போது தலையை மட்டும்தான் இழந்தான். இப்போது கதையே வேறு! இந்த இந்து முன்னணிகள் அதையும் தாண்டிய சித்திரவதைகளை ஈவிரக்கமின்றி செய்கிறார்கள்.

கடலில் கரைக்கப்படும் பரிதாபத்துக்குரிய அந்த விநாயகனைப் பார்த்தால் கண்ணீர் தான் வரும். கால்களை தலைகளை வயிற்றை அடித்து உடைத்து நசுக்கித்தான் விநாயகனை கடலுக்குள் தள்ளுகிறார்கள். விநாயகனுக்கு நடக்கும் இந்த சித்திரவதைகளைக் கண்டு கைதட்டி, விசில் அடித்து, 'பாரத் மாதாக்கி ஜே' என்று தொண்டை கிழிய முழங்குகிறார்கள். "இதுவா கடவுள் பக்தி? இதுவா, தேசபக்தி?" என்று கேட்டால் 'மத விரோதி; தேச விரோதி' என்று எகிறி குதிக்கிறார்கள்.

புராண காலங்களிலேயே வனவிலங்குகள் சட்டம் மீறப்பட்டிருக் கிறது. யானையின் தந்தம் இப்போது வெட்டப்படுகிறது என்றால் பரமசிவன் தலையையே வெட்டி 'விநாயகனுக்கு' பொருத்தியிருக் கிறான், பாருங்கள். இதற்கும் நமது மோடி பெருமை பேசுவார் தான்!

மனிதனுக்கு யானை தலையைப் பொருத்திய 'உறுப்பு மாற்று' மருத்துவம் புராண காலத்திலேயே வந்து விட்டது என்று பூரித்துப் பேசியிருக்கிறார், இருக்காதா?

சொல்லப் போனால் குழந்தைகளை குதூகலிக்கச் செய்யும் ஒரு கார்ட்டூன் படத்துக்கான கதை, திரைக்கதைகளின் அம்சம் கொண்டவன் விநாயகன். அந்த விநாயகனுக்குத்தான் இந்த பக்தி இவ்வளவு பதட்டம்!

**கோடங்குடி மாரிமுத்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வாஞ்சிநாதன் மனைவிக்கு முத்துராமலிங்க தேவர் அடைக்கலம் தந்தாரா?

பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனர் நேதாஜி சுபாஷ் சந்திர போசின் தீவிர ஆதரவாளரான முத்துராமலிங்க தேவர், தென் மாவட்டங்களில் தலித் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய இமானுவேல் சேகர், படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டவர். 'தேசியம் - தெய்வீகம்' என்பதே தனது இரு கண்கள் - என்று கூறி செயல்பட்டவர். தென் மாவட்டங்களில் ஜாதியக் கட்டமைப்பும் ஜாதிய உணர்வும் ஆழமாக புரையோடியிருப்பதற்கு முக்கிய பங்காற்றியவர். அவர் வரலாறு குறித்து செவி வழி செய்திகள் ஆதாரங்களின்றி ஏராளமாக பரப்பப்பட்டு வருகின்றன.

அண்மையில் 'தமிழ் இந்து' நாளேடு (ஆக. 16) இதே போல் ஒரு 'கற்பனை'யை வரலாறாக பதிவு செய்தது. நெல்லை மாவட்டம் மணியாச்சியில் பிரிட்டிஷ் கலெக்டராக இருந்த ஆஷ் துரையை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தன்னையும் சுட்டுக் கொண்டான் வாஞ்சிநாதன் அய்யர். ஆஷ் 'சனாதன தர்மத்துக்கு' எதிராக செயல்படுவதால் அவரை சுட்டுக் கொன்றதாக ஒரு கடிதத்தையே எழுதி வைத்திருந்தான், அந்த வாஞ்சிநாதனின் 'பேரன்' ஜெயகிருஷ்ணன் வாஞ்சியின் மகள் வயிற்றுப் பேரன் என்று கூறிக் கொள்ளும் அவரது பேட்டியை 'தமிழ்இந்து' வெளி யிட்டது. அந்தப் பேட்டியில் 'எங்கள் தாத்தா வாஞ்சி, எங்கள் பாட்டியின் எதிர்காலம் பற்றி கவலைப்படாமல் பொறுப்பில்லாமல் ஆஷ்துரையை சுட்டுவிட்டு எங்கள் பாட்டியையும் அனாதையாக திரிய விட்டார். எங்கள் தாத்தா வாஞ்சி தன்னைத் தானே சுட்டுக் கொண்டபோது எங்கள் பாட்டி நிறைமாத கர்ப்பிணி" என்று கூறியிருந்தார். தொடர்ந்து, 'பேரன்' ஜெய கிருஷ்ணன் கூறியதாக 'தமிழ் இந்து' வெளியிட்டுள்ள செய்தி இது:

"வயித்துல பிள்ளையோட நிர்கதியா நின்ன எங்க பாட்டிக்கு, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தான் அடைக்கலம் கொடுத்தாரு. எதைப் பத்தியும் கவலைப்படாம, பாட்டிய தன்னோட கூண்டு வண்டியிலே ஏத்திகிட்டு கிளம்புனவரு மூன்று மாசமா பாட்டியை கூண்டு வண்டியில் வெச்சுகிட்டே சுத்தியிருக்காரு. நல்ல படியா பாட்டிக்கு எங்கம்மா பொறந்ததும் கந்தர்வக் கோட்டையில் டீக்கடைக்காரர் ஒருத்தர்கிட்ட ரூ.25,000 கொடுத்து எங்கம்மாவை ஒப்படைச்சுட்டாரு. (அப்போது ஒரு பவுன் ரூ5 என்று விற்ற காலம். அந்த காலத்தில் ரூ.25000 என்பது எவ்வளவு பெரிய தொகை. அவ்வளவு தொகையை தந்திருக்க முடியுமா என்பதை வாசகர்கள் முடிவுக்கே விடுகிறோம்) மயிலாப்பூர் கச்சேரி ரோட்டுல ஒரு வீட்டைப் பிடுச்சி பாட்டியையும் மறைவா தங்க வச்சிருக்காரு தேவரு" என்று 'தமிழ் இந்து'வுக்கு அளித்த பேட்டியில் 'பேரன்' ஜெயகிருஷ்ணன் கூறியிருந்தார்.

இந்த 'வரலாறு' முழுமையான கற்பனை என்பதற்கு சான்றுகள் முகநூல்களில் 'வாட்ஸ்' அப்பில் உடனே வெளிவரத் தொடங்கின. விடுதலை இராசேந்திரன் நாள்தோறும் பேசும் 'வாட்ஸ் அப்' செய்தியில் அடுத்த நாளே இந்த வரலாற்றுப் புரட்டை அம்பலப்படுத்தினார்.

**ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்ற நாள் 1911 ஜூன் 17.**

**முத்துராமலிங்க தேவர் பிறந்த நாள் 1908 அக்டோபர் 30ஆம் தேதி.**

ஆஷ் துரை சுட்டுக் கொல்லப்பட்டபோது முத்துராமலிங்கத் தேவர் ஒரு தவழும் குழந்தை. அப்போது அந்தக் குழந்தையின் வயது 2 ஆண்டு 8 மாதம். இரண்டரை வயது குழந்தை. வாஞ்சிநாதன் மனைவிக்கு பாது காப்புக் கொடுத்து அவரை கூண்டு வண்டியிலேயே 3 மாதம் வைத்து காப்பாற்றியதாக ஒரு 'வரலாறு' பதிவு செய்யப்படுகிறது என்றால், அது மோசடி வரலாறு. உண்மை ஆதார பூர்வமாக அம்பலமானவுடன் அடுத்த நாள் வெளி வந்த 'தமிழ் இந்து' (ஆக. 16) ஒரு 'திருத்தம்' போட்டது. அதில் "நிர்க்கதியாய் நின்ற வாஞ்சி நாதன் மனைவி பொன்னம்மாளுக்கு அடைக்கலம் தந்து உதவியவர் முத்துராமலிங்க தேவர் அல்ல; அவரது தந்தை உக்கிர பாண்டித்தேவர்" என்று விளக்கம் தந்த அந்த ஏடு, "முத்துராமலிங்க தேவரின் தந்தையும் தேசப்பற்று மிக்கவராக, இது போன்ற சேவைகள் செய்து வந்தார் என்பது இதன் மூலம் நமக்குக் கிடைத்திருக்கும் **நெகிழ்வான செய்தி"** என்று எழுதி பூரித்தது.

அதற்குப் பிறகு இந்த வரலாற்றுப் புரட்டலுக்கு மற்றொரு அடி செமத்தியாக வீழ்ந்தது. "வாஞ்சி நாதனுக்கு வாரிசே இல்லை. அவர் உயிருடனிருக்கும்போதே ஒரு குழந்தை பிறந்து இறந்து விட்டது" என்ற உண்மையை போட்டு உடைத்தார் வாஞ்சிநாதனின் மனைவி பொன்னம்மாளின் தங்கை பேரனாகிய எஸ்.இராமநாதன்.

அவரது மறுப்பை 'தமிழ் இந்து' நாளேடு (ஆக.19) இதழில் இவ்வாறு


'வாஞ்சிநாதன்.. வாரிசு.. சர்ச்சை.. அந்தப் பேட்டிக்கு

வெளியிட்டிருக்கிறது. "'பேரன்' ஜெயகிருஷ்ணன் கூறியிருக்கும் தகவல்கள் உண்மையில்லை என்று எங்களால் உறுதியாகக் கூற முடியும். எங்களது பெரிய பாட்டி பொன்னம்மாளுக்கு வாரிசு என்று யாரும் இல்லை. எனது பெரிய பாட்டி பொன்னம்மாள் அவர்கள் திருமணமாகி ஒரு ஆண்டுகூட கணவருடன் வாழவில்லை. கணவரை இழந்த பிறகு திருவனந்தபுரத்தில் எங்கள் குடும்பத்தோடே இருந்தார். எங்கள் குடும்பம் சென்னைக்கு குடிபெயர்ந்தபோது அவரும் சென்னைக்கே வந்து விட்டார். அது முதல் சென்னையிலே வசித்த பொன்னம்மாள் பாட்டி நோய்வாய்ப்பட்டு, 1967 ஜூலை முதல் தேதியன்று எங்களது வீட்டில் தான் இயற்கை எய்தினார்" என்கிற மறுப்பை 'தமிழ் இந்து'க்கு எழுதினார்.

வாஞ்சியின் மனைவிக்கு உதவி செய்தது முத்துராமலிங்கதேவர் அல்ல; அவரது தந்தை உக்கிரபாண்டியத் தேவர் என்ற விளக்கத்தை 'நெகிழ்ச்சியோடு' வெளியிட்ட அந்த ஏடு, அப்படி ஒரு விளக்கத்தை 'பேரன்' என்று கூறிக் கொள்ளும் ஜெயகிருஷ்ணன் கூறியதாக வெளியிடவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். 'தமிழ் இந்து'வின் மூளையில் கற்பனையாக உதித்த விளக்கம் அது. இப்போது வெளியிட்ட இறுதி திருத்தத்தில் அந்த "நெகிழ்ச்சியான" விளக்கத்தையும் ஜெயகிருஷ்ணனே தந்ததாக இந்தப் புரட்டையும் அவர் தலை மீதே சுமக்க வைத்து விட்டது, 'தமிழ் இந்து'.

தமிழ்நாட்டில் வாசிப்பு தரத்தை உயர்த்தி வரும் ஏடு 'தமிழ் இந்து'. அத்தகைய ஏடு இத்தகைய 'புனைவு'களை வரலாறாகப் பதிவு செய்து அதற்கு சப்பைக்கட்டுகள் ஏன் கட்ட வேண்டும்?

பெருங்காமநல்லூரில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணிக்கப்பட்ட கட்டாய 'கைரேகை'ப் பதிவை எதிர்த்து மக்கள் வெகுண்டெழுந்து போராடினார்கள். போராட்டத்தில் துப்பாக்கி சூடுகளும் நடந்தன. அந்தப் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தியது முத்துராமலிங்கதேவர் என்று 'வரலாறு' பதியப்படுகிறது. அந்தப் போராட்டம் நடந்த ஆண்டு 1920. அப்போது முத்துராமலிங்க தேவரின் வயது - அவரது பிறந்த நாள் கணக்கின்படி 12.

12 வயது சிறுவனாக இருந்தவர், துப்பாக்கி சூடு வரை சென்ற ஒரு போராட்டத்துக்கு தலைமையேற்று வழி நடத்தியிருக்க முடியுமா?

## தூத்துக்குடி மாவட்ட கலந்துரையாடல்

18.6.2017 அன்று தூத்துக்குடி, டூவிபுரம் 2ஆம் தெருவில் உள்ள முத்து மகாலில் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்தரையாடல் கூட்டம், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் நடைபெற்றது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

மறைந்த முன்னாள் மாவட்டச் செயலாளர் க. மதன், குழந்தைகள் படிப்பிற்கான தொகையினை வருடா வருடம் கொடுத்து வருவது போன்றுஇவ்வாண்டும் கொடுப்பது என்றும், அதற்கான தோழர்களின் பங்களிப்பை விருப்பம் உள்ளவர்கள் மாவட்டத் தலைவரிடம் ஒப்படைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. கழக ஏடுகளான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' இதழ்கள் சந்தாவை சேர்ப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்ட தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாவட்டச் செயலாளர் கோ. அ. குமார். மாவட்ட துணைப் பொறுப்பாளர்கள், பொருளாளர் பொறுப்புகளுக்கு பொறுப்பாளர் நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டது.

## சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 19.08.2017 மாலை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்று முடிந்தது. கலந்துரையாடல் கூட்டத்தை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி ஒருங்கிணைத்தார். கூட்டத்தின் தொடக்கமாக கடவுள் மறுப்பு உரையை குகன் கூறினார்.

இதில், சென்னை மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டு தங்களது சமூகநீதி- சமத்துவ பரப்புரை பயணத்தின் அனுபவங்கள் குறித்தும், அடுத்த கட்ட செயல்பாடுகள் குறித்த கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இதில் பேசிய கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வருகிற 25ஆம் தேதி நடைபெற இருக்கும் வினாயகர் சதுர்த்தி எப்படி இந்துமுன்னணி போன்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளால் அவர்களின் சுயலாபத்துக்காக அப்பாவி ஒடுக்கப்பட்ட மக்களை கடவுளின் பெயரால் ஒன்றுதிரட்டி மற்ற மதத்தவருக்கு எதிராக மாற்றும் போக்கினை எப்படி முறியடிப்பது. வீட்டில் வணங்க வேண்டிய இந்த வினாயகர் சிலையை எதற்காக தெருவில் கொண்டுவந்து இது எப்படி அரசியல் ஆக்கப்படுகிறது, இதன் உள்நோக்கம் என்ன என்பதை மக்களிடம் புரிய வைக்க நாம் என்ன வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும், அதை மக்களிடம் எப்படி எளிய முறையில் கொண்டுச்சென்று புரிய வைக்க வேண்டும் என்பன குறித்த பல கருத்துக்களை முன்வைத்து சிறப்பான உரையாற்றினார். இறுதியாக கழக மாவட்ட தலைவர் வேழவேந்தன் வந்திருந்த தோழர்களுக்கு நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

## மேட்டூரில் கழகம் எடுத்த காமராசர் பிறந்த நாள் விழா

மேட்டூர் சதுரங்காடி பெரியார் திடலில் 22.7.2017 அன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கல்வி வள்ளல் காமராசர் 115ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் பாரூக் நினைவு மேடையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'மாற்றம்' நாடகக் குழுவினர் நாடகம், தற்பொழுது பா.ஜ.க. ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமூக அவலங்களைத் தோலுரித்துக் காட்டியது. அதனைத் தொடர்ந்து மழலையர்களின் நடனம் நடைபெற்றது. அவர்களுக்கு மேடையில் பரிசு வழங்கப்பட்டது.

கூட்டத்திற்கு மேட்டூர் நகர செயலாளர் அ.சுரேசு குமார் தலைமை தாங்க, நங்கவள்ளி அன்பு உரைக்குப் பின் வே மதிமாறன், காமராசரைப் பற்றி சிறப்புரையாற்றினார். காவேரிகிராஸ் பகுதி காளியப்பன் நன்றியுரை கூற கூட்டம் முடிவுற்றது.

மேட்டூரின் முக்கியப் பகுதிகளில் விளம்பரத் தட்டிகள், சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. கழகக் கொடிகள் நகரமெங்கும் நடப்பட்டிருந்தன. கூட்டத்தில் அதிகளவு மக்கள் உரைக் கேட்டு தெளிவு பெற்றனர். இறுதியாக அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. தோழர்களும் பொறுப்பாளர்களும் பெருமளவு கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th August 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN